மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இன்றே அதைப்பற்றிய விவரம் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

3. தகவல்கோரல் (தொடர்ச்சி).

(ஆ) அமைச்சர் அவர்கள் சொன்னபடி விவர அறிக்கை வைக்கப்படாதது குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, ரூல் 41இல் நான் 3-வது அயிட்டமாக கவன ஈர்ப்புப் படித்த போது அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று பதில் சொன்னார்கள், ஆனால் நானும் தேடித் தேடிப் பார்த்தேன், காணோம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே நான் இங்கே கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புக்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே அவையிலே விவர அறிக்கை வைக்கப் பட்டிருக்கின்றது என்று தவறுதலாகச் சொல்லி விட்டேன், அதற்காக வருத்தப்படுகிறேன். இப்போது அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து (தொடர்ச்சி).

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரினுடைய கடைசி நாள் இன்று. நான் கடந்த மார்ச் மாதம் 1 ஆம் தேதி சென்னை நகரத்திலே கிண்டியை அடுத்த மடுவங்கரை போன்ற பகுதி களிலே குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு மாநகராட்சியின் லாரிகள் குடி தண்ணீர் ஒழுங்காக விநியோகம் செய்யவில்லை என்ற நிலைமையைக்குறித்து நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே கொடுத்து இருந்தேன். ஏறக்குறைய ஒன்றரை மாதம் ஆகிவிட்டது. அந்தக்கவனஈர்ப்புத் தீர்மானம் அவையிலே வந்து பதில் சொல்லப்படவில்லை. இது மாதிரி நிகழ்ச்சி நடந்தால் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கே அர்த்தம் இல்லாமற்போய் விடும். ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, ஒரு கவனஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு அனுப்பப்பட்டால் இத்தனை நாட்களுக்குள் விவர அறிக்கை வர வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லி அமைச்சர்களை நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)